கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 06.03.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**<u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 43-வது பட்டமளிப்பு விழா</u>**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 43-வது பட்டமளிப்பு விழா, மார்ச்09, 2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு, மேதகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தலைமையேற்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சரும், இப்பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் புதிய விருதுகளுக்கான அறநல்கை பரிசுகளையும், பதக்கங்களையும் அறிவிக்கவுள்ளார்.

அவ்வமயம், திரு.மனோஜ் அகுஜா, இ.ஆ.ப.அவர்கள், செயலாளர், வேளாண்மை - உழவர் நலத்துறை, இந்திய அரசு, புது தில்லி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றவுள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உறுப்பு கல்லூரிகளில் இருந்து 1589 மாணவர்கள் நேரடியாகவும் (*In person*),299 மாணவர்கள் தபால் (*In absentia*) மூலமாகவும் மற்றும் இணைப்பு கல்லூரிகளில் இருந்து 1845 மாணவர்களும் பட்டங்களைப் பெற உள்ளார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**